## சிறுநில உடைமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு) - 2016

---

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறு) 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆந் திகதிய 712-எல்கே இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறின் தொழிற்பாடுகள் மீது இலங்கை மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் இவ் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

---

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கி நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கான அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்றல் முகவராக உள்ளது. பயனாளிகளின் நிறுவகரீதியான இயலுமையினையும் சமரசம் செய்தல் நுட்பங்களையும் வலுப்படுத்துதல், சிறுதோட்ட நில உடைமை தேயிலை மற்றும் இறப்பர் செய்கையாளர்களின் காணிக் குத்தகை நிலைமையினை மேம்படுத்துதல், முன்னேற்றகரமான அறுவடைக்குப் பிந்திய கையாளலின் ஊடாக உற்பத்தியாளர்களின் இலாபத்தினை அதிகரித்தல், அவர்களின் உற்பத்திப் பொருட்களினை களஞ்சியப்படுத்தல், செயல்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல், கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் விரிவுபடுத்துதலும், பெண்கள் தங்களின் வாழ்க்கை நிலைமையினை மேம்படுத்துதலினையும் தங்களின் வறுமையினைக் குறைப்பதனையும் உறுதிப்படுத்துதல் என்பனவே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 2,574 மில்லியனுக்குச் சமமான 15.25 மில்லியன் எஸ்டீஆர் (23 மில்லியன் அமெரிக்க டொலர்) தொகையாகும் . இதில் ரூபா 295 மில்லியனுக்குச் சமமான 1.75 மில்லியன் எஸ்டீஆர் (2.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்காக ஒதுக்கப்பட்டது. கிராமிய நிதியிடல் மற்றும் கடன் கூறிற்கான ஒதுக்கீடு 2014 செப்தெம்பரில் ரூபா 494 மில்லியனுக்கு சமனான 2.6 மில்லியன் எஸ்டீஆர் (3.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஆக மீள்திருத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் துணைநிலை கடன் உடன்படிக்கை 2015 மே 29 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு உள்ளடக்கின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, 2016 திசெம்பர் 31 இல் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கிராமிய நிதியிடலிற்காக உடன்பட்ட தொகை | | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | எஸ்டீஆர் மில்லியன் | ரூபா. மில்லியன் | எஸ்டீஆர் மில்லியன் | ரூபா. மில்லியன் | எஸ்டீஆர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஐ.எவ்.ஏ.டி | 2.6 | 494 | 0.31 | 63 | 2.48 | 488 |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந் நிகழ்ச்சித் திட்டமானது 31 டிசம்பர் 2016 இல் உள்ளவாறு ரூபா 487.66 மில்லியன் பெறுமதியான 4,060 மீள்நிதியிடல் கடன்களை 7 பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் ஊடாக மொனராகலை, கேகாலை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பயனாளிகளுக்கு வழங்கியிருந்தது. இதில் ரூபா 400 மில்லியன் பெறுமதியான 3,185 மீள்நிதியீட்டக் கடன்கள் பொதுத்துறையிலுள்ள 3 பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும் ரூபா 88 மில்லியன் பெறுமதியுடைய 875 மீள்நிதியீட்டக் கடன்கள் மட்டும் தனியார் துறையின் 4 பங்குபற்றும் நிதி நிறுவனங்களாலும் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைவாக மீள்நிதியீட்டக் கடன்களின் மொத்தப் பெறுமதியில் 70%தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 340.69 மில்லியன் பெறுமதியான மீள்நிதியீட்டக் கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் மொத்த மீள்நிதியீட்டக் கடன் பெறுமதியில் 23% ஆன ரூபா 110.46 மில்லியன் மீள்நிதியீட்டப்பட்ட கடன் தொகையானது சிறு நில உடமையாளர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கத்திற்காக செலுத்தப்பட்டது. அத்துடன் மீள் நிதியீட்டக் கடன் மொத்தப் பெறுமதியில் 64%தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 310.40 மில்லியன் பெறுமதியான 2,357 மீள்நிதியீட்டக் கடன்கள் மொனராகலை மாவட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அதே வேளை மீள்நிதியீட்டக் கடன்களின் மொத்தப் பெறுமதியில் 26% தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 128 மில்லியன் பெறுமதியான 1,255 மீள்நிதியீட்டக் கடன்கள் கண்டி மாவட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

**3.3 சுழற்சி நிதியம்**

---------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 345 மில்லியன் பெறுமதியான மீள்நிதியிடல் கடன்களின் மொத்த மூலதன அறவீடுகள் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதிக்கு பின்னர் குறித்த நோக்கங்களுக்காக மீள்நிதியிடல் கடன்களின் கடன் வழங்கல்களைத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கும் நோக்கத்தோடு இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தில் பராமரிக்கப்பட்ட விசேட கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.